குழித்துறை நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 28-04-2023 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது. தாங்கள் தவறாது கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறை நகராட்சி கல்பாலத்தடி வாய்கால் கரையோரம் அமைந்துள்ள பொது கழிப்பிடத்திற்கு செல்வதற்கான இரும்பு பாலம் மிகவும் சேதப்பட்டு அடிக்கடி பழுது ஏற்படுகிறது. ஆகையால் இந்த பாலத்தை கான்கிரீட்டால் நிரந்தரமாக அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
தீர்மானம் எண் 467 - தீர்மானிக்கப்பட்டது

2) கன்னியாகுமரி மாவட்ட அடைக்கப்பட்ட குடிநீர் உற்பத்தியாளர்கள் அதனை சார்ந்த தொழில் நிறுவனங்கள் மற்றும் விற்பனையாளர்கள் தொழில் கூட்டுறவு சேவை சங்கத்தின் கீழ் மார்த்தாண்டம் பேருந்து நிலையம் அருகிலுள்ள ஒரு பகுதியில் அடைக்கப்பட்ட குறைந்த விலை குடிநீர் விற்பனை நிலையத்திற்கு அனுமதியளித்து சேவை செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.
தீர்மானம் எண் 468 - தீர்மானிக்கப்பட்டது

4-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.C. லலிதா கொண்டு வரும் தீர்மானம்

1) 4-வது வார்டில் வள்ளிக்கோடு-ல் உள்ள பொதுக்கிணற்றை சுத்தம் செய்து மோட்டார் பொருத்தி சின்டெக்ஸ் வைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
தீர்மானம் எண் 469 - தீர்மானிக்கப்பட்டது

2) குந்நன்விளையில் உள்ள பொது கிணறு தூர் வாரி, வலை மூடி போட மன்றம் தீர்மானிக்கலாம்.
தீர்மானம் எண் 470 - தீர்மானிக்கப்பட்டது

7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.U.R. விஜயலெட்சுமி கொண்டு வரும் தீர்மானம்

1) கடைத்தெருவில் சுபாஸ் வீட்டு பக்கத்திலிருந்து ஐயப்பன் (பிறாவு) வீடுவரை ஓடை மண் எடுத்து ஆழப்படுத்தி சிலாப் போட மன்றம் தீர்மானிக்கலாம்.
தீர்மானம் எண் 471 - தீர்மானிக்கப்பட்டது

8-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.G.S. மினிகுமாரி கொண்டு வரும் தீர்மானம்

1) செங்கன்மூலை வார்டில் கல்பாலத்தடி இசக்கி அம்மன்கோயில் எதிர்புறம் வாய்க்கால் பாதை பிரிவுபடுத்தி தடுப்பு சுவர் அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.
தீர்மானம் எண் 472 - தீர்மானிக்கப்பட்டது

2) படப்பறை குளத்திலிருந்து இடக்குளம் செல்லும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது இந்த சாலையை கான்கிரீட் போட்டு தர மன்றம் தீர்மானிக்கலாம்.
தீர்மானம் எண் 473 - தீர்மானிக்கப்பட்டது

3) இடக்குளம் வாய்க்கால் எதிர்புறம் புறம்போக்கு நிலம் அமைந்துள்ளது. இந்த இடத்தில் அங்கன்வாடி மற்றும் நூலகம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
தீர்மானம் எண் 474 - தீர்மானிக்கப்பட்டது

4) Rajiv Nagar இளிப்பவிளை சாலையில் அமைந்துள்ள 34-ம் எண் Post-யை வலதுபுறத்திலிருந்து இடதுபுறம் மாற்றி அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.
தீர்மானம் எண் 475 - தீர்மானிக்கப்பட்டது

11-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.J.K. றோஸ்லெட் கொண்டு வரும் தீர்மானம்

1) 11-வது வார்டில் கமிஸ்னர் வீட்டின் முன்புறம் உள்ள சாலை முதல் RI ஐயப்பன் வீடு வரை சாலை செப்பனிட்டு தர மன்றம் தீர்மானிக்கலாம்.
தீர்மானம் எண் 476 - தீர்மானிக்கப்பட்டது

2) சனல்குமாரின் வீட்டின் முன் உள்ள போஸ்டு ஒகிப்புயலின் போது சேதமடைந்து முறிந்து விட்டது. அதை மாற்றி போட்டு தர மன்றம் தீர்மானிக்கலாம்.
தீர்மானம் எண் 477 - தீர்மானிக்கப்பட்டது

3) தீலீப்குமாரின் 3 வீடுகளிலிருந்து கழிவுத் தண்ணீர் ஒடையில் பாய்கிறது. மிகவும் சுகாதாரமற்ற நிலையில் உள்ளது. நகராட்சியிலிருந்து 4 முறை சிமென்று வைத்து அடைத்த பிறகும் அதை உடைத்து விட்டு ஓடையில் கழிவு தண்ணீர் பாயும் படி செய்யப்பட்டுள்ளது. நகராட்சி ஊழியர்களை தகாத வார்த்தைகளால் பேசினார். உரிய நடவடிக்கை எடுக்க. மன்றம் தீர்மானிக்கலாம்.
தீர்மானம் எண் 478 - தீர்மானிக்கப்பட்டது

4) பெண்கள் மேல்நிலை பள்ளியின் பின்புறம் உள்ள ஓடையில் இரண்டு வீடுகளின் முன்பகுதியில் ஓடை சிலாப் போட மன்றம் தீர்மானிக்கலாம்.

தீர்மானம் எண் 479 - தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண்.1</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கடைகள் மற்றும் குத்தகை இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டுள்ளது.

I. குழித்துறை வணிகவளாக கடை எண்.5

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | வைப்புத் தொகை ரூபாய் | மாத வாடகை தொகை |
|---|---|---|---|
| 1 | திரு. டொனால்டு,<br>தீபம் காட்டேஜ்,விளவங்கோடு | 50000/- | 3500/- |
| 2 | திரு. காட்வின்ராஜ்,<br>முதப்பன் கோடு,<br>அண்டுகோடு | 50000/- | 3200/- |

II. பி.பி. முனுசாமி வணிவளாக கடை எண்.G4

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதிC. சகாயமெர்சி,<br>அழகப்பபுரம்,<br>கன்னியாகுமரி | 50000/- | 6200/- |
| 2 | திருமதி.E. ஜிலியட்தாஸ்,<br>கிருஷ்ணாபுரம்,<br>திருநெல்வேலி | 50000/- | 6500/- |

III. மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடை எண். A11

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.C. பேபி,<br>செறுகெட்டவிளை,<br>கட்டாத்துறை. | 50000/- | 5350/- |

IV. மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கழிப்பிடம்

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.K.கிறிஸ்துதாஸ்,<br>அமலறவிளை வீடு, மீனச்சல் | 157000/- | 315000/- |

V. பேருந்து நிலையம் நுழைவு கட்டணம்

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.M. கிறிஸ்துராஜ்,<br>தனவிளைவீடு, படந்தாலுமூடு | 150000/- | 578000/- |

VI. இருசக்கர வாகன காப்பகம்

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.M. கிறிஸ்துராஜ்,<br>தனவிளைவீடு, படந்தாலுமூடு | 50000/- | 46000/- |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.I-ல் காணும் குழித்துறை வணிகவளாக கடை எண்.5 - 2021-2022-ல் மாத வாடகை ரூ.7200/-க்கு வாடகைக்கு எடுத்து நடத்தி வந்த நிலையில் கடை நடத்த இயலாததால் கடை ஒப்படைப்பு செய்யப்பட்டு வாடகை தொகை வைப்புத்தொகையில் ஈடு செய்யப்பட்டு தற்சமயம் பூட்டிய நிலையில் உள்ளது. தற்சமயம் இருமுறை குறைந்த வாடகை தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நிராகரிக்கப்பட்டுள்ளது.

வரிசை எண்.II-ல் காணும் பி.பி. முனுசாமி வணிவளாக கடை எண்.G4 மாத வாடகை ரூ.6200/-க்கு நடத்தி வந்த நிலையில் கடை ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

வரிசை எண்.III-ல் காணும் மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடை எண். A11 - 2016-2017 முதல் தற்சமயம் 2022-2023 வரையில் பலமுறை ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் எவரும் வாடகைக்கு எடுக்க முன்வரவில்லை.

வரிசை எண்.IV-ல் காணும் மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கழிப்பிடம்- 2022-2023-ல் ரூ.3,09,913/-க்கு ஏலம் கோரப்பட்டுள்ளது.

வரிசை எண்.V-ல் காணும் பேருந்து நிலையம் நுழைவு கட்டணம் 2022-2023-ல் ரூ.5,73,300/-க்கு ஏலம் கோரப்பட்டுள்ளது.

வரிசை எண்.VI-ல் காணும் இருசக்கர வாகன காப்பகம் 2022-2023-ல் ரூ.44,100/-க்கு ஏலம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி இனங்களுக்கு உரிமம் வழங்குதல் குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- வரிசை எண். IV, V, VI-ல் கண்டுள்ள இனங்கள் 1-4-2023 முதல் உரிமம் வழங்க வேண்டியுள்ளதால் நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று உரிமம் வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

வரிசை எண். I, II, III-ல் உள்ள கடைகளுக்கு உரிமம் வழங்குவது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

ந.க.எண்.3066/2021/அ2.

தீர்மானம் எண் 480 -

பொருள் எண்.2

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN.75W-0236-ற்கு 2023-ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெறும் பொருட்டு வாகனத்திலுள்ள பழுதுகளை நீக்கம் செய்ய ரூ.1,09,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 21-03-2023 அன்று

ஒப்பந்தப்புளளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்டவாறு.

1) Ganesh Motor works 0.22% மதிப்பீட்டை விட குறைவு
2) Mathavan Mortors 1.19% மதிப்பீட்டை விட அதிகம்

மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Ganesh Motor works என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்
ந.க.எண்.2295/2018/இ1.

தீர்மானம் எண் 481 - ஒப்புகொள்ளப்பட்டது

<u>பொருள் எண்.3</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட தேங்காய் பட்டணம் சாலையில் அமைந்துள்ள பொது கழிப்பிடத்தில் தண்ணீர் வசதி மற்றும் மின்வசதி செய்திடவும் ரூ.2.30 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்றத்தீர்மானம் எண்.447, நாள் 24-03-2023-ன்படி மன்ற அனுமதி பெற்று 31-03-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு சதவீகிதம் |
|---|---|---|
| 1 | திரு. ஜஸ்டின்குமார் | மதிப்பீட்டை விட 0.06% அதிகம் |
| 2 | Raj construction | மதிப்பீட்டை விட 0.16% குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் சரிபார்க்கப்பட்டதில் ஒப்பந்ததாரர் Raj construction என்பவர் 0.16% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளார். மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.
அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
ந.க.எண்.704/2023/இ1.

தீர்மானம் எண் 482 - ஒப்புகொள்ளப்பட்டது

<u>பொருள் எண்.4</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கழிப்பறைகளை 2.0 திட்டத்தின் கீழ் பராமரித்து அனைத்து கழிப்பறைகளையும் செயல்பாட்டிற்கு கொண்டுவர நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி வெட்டுவெந்நி சப்பாத்து, கல்பாலத்தடி, பேருந்து நிலையத்திலுள்ள இரண்டு கழிப்பறைகள், பெண்டுகடவு கழிப்பறைகள் வர்ணம் பூசி தண்ணீர் மற்றும் மின்வசதி செய்து வழங்கிட ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்றத்தீர்மானம் எண்.446, நாள் 24-03-2023-ன்படி மன்ற அனுமதி பெற்று 31-03-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு சதவீகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி. சுரேஷ் | மதிப்பீட்டை விட 0.14% அதிகம் |
| 2 | திரு.எஸ். பாபு | மதிப்பீட்டை விட 0.17% குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் சரிபார்க்கப்பட்டதில் ஒப்பந்ததாரர் திரு.எஸ். பாபு என்பவர் 0.17% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளார். மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரருக்கு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
ந.க.எண்.705/2023/இ1.

தீர்மானம் எண் 483 - ஒப்புகொள்ளப்பட்டது

<u>பொருள் எண்.5</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பெருந்தெருவில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது பணி செய்யும் இடத்தில் தாலுகா அலுவலகம் மூலம் ஜப்தி செய்த வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளதால் பணி செய்திட தடையாக உள்ளது. ஆகவே மேற்படி இடத்தில் நிறுத்தப்பட்ட வாகனங்களை Hitachi, JCB, Crain ஆகிய வாகனங்களை கொண்டு தான் ஜப்தி செய்யப்பட்ட வாகனங்களை அப்புறப்படுத்த இயலும். அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.20 இலட்சத்திற்கு மன்றம் ஒப்புதல் அளித்துள்ளதால் 31-03-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு சதவீகிதம் |
|---|---|---|
| 1 | திரு. ஜஸ்டின்குமார் | மதிப்பீட்டை விட 0.63% அதிகம் |
| 2 | Raj Construction | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் சரிபார்க்கப்பட்டதில் ஒப்பந்ததாரர் Raj Construction என்பவர் 0.02% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளார். மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி

கோரிய ஒப்பந்ததாரருக்கு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.
அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
ந.க.எண்.706/2023/இ1.

தீர்மானம் எண் 484 - ஒப்புகொள்ளப்பட்டது

பொருள் எண்.6

குழித்துறை நகராட்சியின் உபயோகத்திலுள்ள பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, நகரமைப்பு பிரிவு, பொதுப்பிரிவுகளில் இயங்கும் 6 KVA UPS with Battery அடிக்கடி பழுது ஏற்படுவதால் தற்போது உள்ள UPS-ன் தற்காப்பு காலம் முடிவடைவதால் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு Battery வருடாந்திர பராமரிப்பு செய்திட ரூ.60000/-த்திற்கு மன்றத்தீர்மானம் எண்.459, நாள் 24-03-2023-ன்படி மன்ற அனுமதி பெற்று 31-03-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு சதவீகிதம் |
|---|---|---|
| 1 | திரு.என். தாம்சன் | மதிப்பீட்டை விட 0.64% குறைவு |
| 2 | அன்னை ஜெனரேட்டர் | மதிப்பீட்டை விட 2.64% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் சரிபார்க்கப்பட்டதில் ஒப்பந்ததாரர் திரு.என். தாம்சன் என்பவர் 0.64% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளார். மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.
அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.599/2023/இ1.

தீர்மானம் எண் 485 - ஒப்புகொள்ளப்பட்டது

பொருள் எண்.7

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் குடிநீர் வினியோகம் சீராக செய்வதற்கு தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 7 மின்மோட்டார்கள், சப்பாத்து நீரேற்று நிலையத்தில் உள்ள சப்மேர்ச்சிபிள் மோட்டார், ,இடைக்குளம் நீரேற்று நிலையத்தில் உள்ள சப்மேர்ச்சிபிள் மோட்டார் குடிநீர் பயன்பாட்டிற்கு அல்லா இதர பயன்பாட்டிற்கு உபயோகத்திற்கு அமைக்கப்பட்டுள்ள கம்பர்சர் மோட்டார்களை பழுதுபார்க்கும் பணிக்கு ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்றத்தீர்மானம் எண்.454, நாள் 24-03-2023-ன்படி மன்ற அனுமதி பெற்று 31-03-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு சதவீகிதம் |
|---|---|---|
| 1 | திரு.பி. ஜெயபிரகாஷ் | மதிப்பீட்டை விட 0.63% அதிகம் |
| 2 | திரு.ஆர். ஜெயசிங் | மதிப்பீட்டை விட 0.09% குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் சரிபார்க்கப்பட்டதில் ஒப்பந்ததாரர் திரு.ஆர். ஜெயசிங் என்பவர் 0.09% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளார். மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

ந.க.எண்.581/2023/இ1.

தீர்மானம் எண் 486 - ஒப்புகொள்ளப்பட்டது

<u>பொருள் எண்.8</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.16 கீழ்பம்மம் முதல் APJ நகர் செல்லும் சாலையிலுள்ள மழைநீர் வடிகால் இடிந்து சாலையில் பழுது ஏற்பட்டு உள்ளது. மேற்படி வடிகாலினை சரி செய்ய ரூ.30000/-த்திற்கு மதிப்பீட்டிற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தீர்மானம் எண்.236, நாள் 04-08-2022-ன்படி மன்ற அனுமதி பெற்று 31-03-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு சதவீகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி. ராஜன் | மதிப்பீட்டை விட 0.10% அதிகம் |
| 2 | திரு. பாபு | மதிப்பீட்டை விட 0.07% குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் சரிபார்க்கப்பட்டதில் ஒப்பந்ததாரர் திரு. பாபு என்பவர் 0.07% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளார். மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரருக்கு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

ந.க.எண்.3166/2022/இ1.

தீர்மானம் எண் 487 - ஒப்புகொள்ளப்பட்டது

<u>பொருள் எண்.9</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பத்திரிக்கையில் விளம்பரம் செய்த வகைக்கு மதுரை மணி பத்திரிக்கையிலிருந்து ரூ.27,518/-க்கான செலவினப் பட்டியல் பெறப்பட்டுள்ளது. அத்தொகையினை மதுரை மணி பத்திரிக்கை நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.

ந.க.எண்.3066/2021/அ2.

தீர்மானம் எண் 488 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.10

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் சி.எஸ்.ஐ.காம்பவுண்ட் சுவர் இடிக்கப்பட்டது தொடர்பாக பிஷப், சி.எஸ்.ஐ. சர்ச் மார்த்தாண்டம் என்பவரால் சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்டுள்ள வழக்கு WP(MD)No.20519/2017-ற்கு நகராட்சி சார்பில் ஆஜராகி எதிர் வாதுரை தாக்கல் செய்த வகையில் வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/- வழங்குமாறு திரு.கே. வாமணன் வழக்கறிஞர் அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, இத்தொகையினை வழக்கறிஞருக்கு வழங்குவதற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 489 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.11

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட குழித்துறை லட்சுமி திரையரங்கம் எதிரில் குழித்துறை நகரம் புல எண்.A3-103 முதல் .A3-108 வரை உள்ள தனியாருக்கு சொந்தமான இடத்தினை இந்நகர் மன்றத் தீர்மானம் எண்.1338, நாள் 30-11-2001-ன் படி மினி பேருந்து நிலையம் அமைக்க கட்டாய நில ஆர்ஜிதம் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டது தொடர்பாக மேற்படி நில உரிமையாளர்களில் ஒருவரான திரு.A.P. நெல்சன் என்பவர் சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் WP(MD)No.7765/2014-ன்படி வழக்கு தொடர்ந்து வழக்கு நிலுவையில் உள்ளது. இவ்வழக்கினை நகராட்சி சார்பில் ஆஜராகி எதிர் வாதுரை தாக்கல் செய்த வகையில் வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/- வழங்குமாறு திரு.கே. வாமணன் வழக்கறிஞர் அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, இத்தொகையினை வழக்கறிஞருக்கு வழங்குவதற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3018/2013/ந.அ.ஆ.

தீர்மானம் எண் 490 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.12

குழித்துறை நகராட்சியில் 2023-2024-ம் நிதியாண்டிற்கான வருவாய் நிதி மற்றும் மூலதனநிதி, குடிநீர் நிதி மற்றும் வடிகால் நிதிக்குரிய வரவு செலவு மன்றத்தின் பார்வைக்கு 24-03-2023-ல் வைக்கப்பட்டதில் தீர்மான எண்.464-ன்படி தமிழில் தாக்கல் செய்ய தீர்மானிக்கப்பட்டது. எனவே தமிழில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.550/2019/பி1.

தீர்மானம் எண் 491 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.13</u>

குழித்துறை நகராட்சியில் 2008-2009 முதல் வருமானவரி ரூ.62,37,540/- செலுத்தப்படவில்லை என வருமானவரி அலுவலகத்திலிருந்து கடிதம் வரப்பெற்றதற்கு மேற்படி தொகையை திரு. வின்ஸ்ராஜ், பட்டய கணக்காயர் மூலம் Online மூலம் குறைவு செய்து ரூ.91,240/- செலுத்த சரி செய்து தந்த வகைக்கு ரூ.30,250/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.781/2019/பி1.

தீர்மானம் எண் 492 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.14</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் அரசுப்பள்ளிகளில் 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்த ஏதுவாக தோராய செலவினம் மற்றும் ஒருங்கிணைப்பு சமையற்கூடங்களுக்கான கட்டடம்.காலியிடம் கண்டறியப்பட்டு அதன் விபரம் அனுப்பி வைக்கவும், ஒவ்வொரு ஒருங்கிணைப்பு மையத்திலும் குறைந்தது 1000 குழந்தைகளுக்கு சமைக்கும் விதத்தில் வசதிகளை ஏற்படுத்திட ஏதுவாக அனைத்து கட்டடங்கள் மற்றும் காலியிடங்கள் குறைந்த பட்சம் 1000 சதுர அடியிலிருந்து 1500 சதுர அடி வரை தேர்ந்தெடுக்கவும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.17404/2022/எம்-1, நாள் 10-03-2023 தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் புதிய கட்டடம் கட்டுவது தொடர்பான பணிகளை விரைவில் மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைக்கவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் எண் 493 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.15</u>

மார்த்தாண்டம் பேருந்து நிலைய அபிவிருத்திப் பணிகள் செய்ய தீர்மானம் எண்.1370, நாள் 29-01-2008-ன்படி ஒப்பந்ததாரர் திரு.எம்.எம். கிளீட்டஸ் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி பணிகள் 15 மாதத்திற்குள் முடித்து பயன்பாட்டிற்கு ஒப்படைக்க வேண்டும் என நிபந்தனைகளின்படி நகராட்சியில் 27-01-2010-ல் ஒப்பந்தம் செய்து பணி செய்யப்பட்டதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதை காரணம் காட்டி அன்னாரை கருப்பு பட்டியலில் சேர்த்து மறுடெண்டர் கோரப்பட்டது. அதனை தொடர்ந்து ஒப்பந்ததாரர் கிளீட்டஸ் என்பவர் அவர் செய்துள்ள பணிக்காலத்தில் பில் பட்டியலில் பிடித்தம் செய்த

தொகை மற்றும் வைப்புத் தொகையினை திருப்பி கேட்டு மதுரை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு WP(MD)No.14280/2022 மேற்படி வழக்குக்கான Counter தயார் செய்த வகையில் நகராட்சி வழக்கறிஞர் திரு.டி. ஷாஜிகுமார் என்பவருக்கு ரூ.5000/-மும் உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு.பி. பாலசுப்பிரமணி என்பவருக்கு ரூ.9500/-மும் வழங்க கேட்டு செலவு பட்டியல் வரப்பெற்றது. தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. மன்றம் முடிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 494 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.16

குழித்துறை நகராட்சியில் NUHM 2022-2023-ம் ஆண்டு திட்டத்தின்கீழ் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்க செய்தி மக்கள் தொடர்பு துறை மூலம் விளம்பரம் செய்த வகையில் Kal publication pvt. Ltd. என்ற பத்திரிகைக்கு ரூ.11718/-ஐ வழங்கிட செலவு பட்டியல் வரப்பெற்றுள்ளது. தொகையினை Kal publication pvt. Ltd. என்ற நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.

ந.க.எண்.43/2022/இ1.

தீர்மானம் எண் 495 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.17

இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN.74V.4642 வாகனம் அரசு தானியங்கி பொறியாளர் அவர்கள் தலைமையில் குழு ஆய்வு செய்ததற்கான கட்டணம் ரூ.750/-ஐ திரு. நடராஜன், ஒட்டுநரால் செலவு செய்யப்பட்டது என ஒட்டுநர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். ஆகவே மேற்படி தொகையினை ரூ.750/-ஐ அன்னாருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. மன்றம் முடிவு செய்யலாம்.

ந.க.எண்.877/2013/இ1.

தீர்மானம் எண் 496 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.18

குழித்துறை நகராட்சியின் தமிழக அரசின் ஒராண்டு சாதனைகள் Evening Tamil Nadu பத்திரிகையில் செய்தி மக்கள் தொடர்பு துறை மூலம் விளம்பரம் செய்த வகையில் ரூ.14,490/- பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை Evening Tamil Nadu நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. மன்றம் முடிவு செய்யலாம்.

ந.க.எண்.1379/2019/இ1.

தீர்மானம் எண் 497 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.19

குழித்துறை நகராட்சியில் 2022-2023-ம் ஆண்டிற்கு சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் package I, II, III-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் Offline மூலமாக ஒப்பந்தப்புள்ளி வாங்க வேண்டும் என தெரிவித்து ஒப்பந்ததாரர் திரு. மணிகண்டன் மதுரை உயர்நீதிமன்றத்தில் WP(MD)No.2166/2023 வழக்கு தொடர்ந்துள்ளார் மேற்படி வழக்கினை நகராட்சி சார்பில் வாதாடிய வகைக்கு திரு. பாஸ்கரன் மற்றும் மாணிக்கம் ஆகிய வழக்கறிஞர்களுக்கு ரூ.20000/- (15000 + 5000) வழங்க கேட்டு செலவு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை வழக்கறிஞர்கள் திரு. பாஸ்கரன் என்பவருக்கு ரூ.15000/-ம் மற்றும் திரு.எ.கே. மாணிக்கம் அவர்களுக்கு ரூ.5000/-ம் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.4882/2022/இ1.
தீர்மானம் எண் 498 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.20

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8 பிளாக் 14-ல் அமைந்துள்ள இடைக்குளம் கரை இசக்கியம்மன் கோவில் வழிபாட்டு இடமாக உள்ளதால் ரீசர்வே எண்.A3/22 கட்டிடமில்லாத காலிமனையாக உள்ள ஒரு சென்றில் அமைந்துள்ள கோவில் கட்டிடத்திற்கு நகராட்சி சொத்துவரியிலிருந்து விலக்களிக்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.325/2023/அ1.
தீர்மானம் எண் 499 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.21

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் ரூபாய் 25.00 லட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைக்க 6.4.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு சதவீகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எம். ஜாண்சன் | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | திரு. பி.ஜெயசந்திரன் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் சரிபார்க்கப்பட்டதில் மதிப்பீட்டை விட 0.15% குறைவாக விலைப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரர் திரு.பி. ஜெயச்சந்திரன் என்பவரின் விலைப்புள்ளியினை ஏற்று

நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

அ.கு. மேற்படி பணியானது தமிழக அரசின் அத்தியாவசிய பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்

ந.க.எண்.1967/2022/இ1.

தீர்மானம் எண் 500 - ஒப்புக்கொள்ளப்பட்டது

பொருள் எண்.22

இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN.75M.4923-க்கு இரண்டு பின்பக்க டயர்கள் பழுதானதாகவும் அதை சரி செய்து தர ஒட்டுநர் கேட்டுள்ளார். இரண்டு பின்பக்க டயர்கள் மாற்றிட உத்தேச மதிப்பீடு ரூ.7900/-க்கு விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை வருவாய் நிதியில் செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. - மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

தீர்மானம் எண் 501 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.23

இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN.75L.0828-ல் A/C பழுது ஏற்பட்டுள்ளதால் அதனை சரி செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் குறைந்த விலைப்புள்ளியாக உத்தேச மதிப்பீடு ரூ.20,000/- வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை பொது நிதியிலிருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. - மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

தீர்மானம் எண் 502 - அனுமதிக்கப்பட்டது

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.